# காங்கரஸ் தொண்டன் முழக்கம்.

## கட்டாய ஹிந்தி எதிர்ப்புத் தலைமை நிலையத்துக்குக் கடிதம்

(என். ஆசிர்வாதம் எழுதிக்கொண்டிது.)

சென்னை, ஜூன் 3

தமிழ் நாட்டில் ஹிந்தி கட்டாயக் கல்வியை எதிர்த்துச் செய்யப்பட்ட செய்ல்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கைப்போல் பானற்றுவிட்டன. அன்னவருக்குத் தற்சமயம் இருந்துவரும் சென்னை சட்டசபையின் மெஜாரட்டியின் பலத்தினாலும், பிடிவாதத்தினாலும் ஹிந்தியைப் புகுத்தித் தமிழைக் கொலை செய்யத் தீர்மானித்துவிட்டார். ஆரிய சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்பதைத் தமிழன்பர்கள் அறியவேண்டும். கனம் இராஜகோபாலாச்சாரியார் கோஷ்டிகளுக்குத் தமிழர்களின் தியாகத்தைக் காட்டநானும் தயாராயிருக்கிறேன்.

தமிழ் வீரர்களே! உங்களுடைய தாய்பாஷையைக் காப்பாற்ற ஒவ்வொரு தமிழ் மகனும் எவ்வித தியாகத்திற்கும் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு, உண்மை தேசத் தொண்டன், கனம் சி. இராஜகோபாலாச்சாரி தலைமையின் கீழ் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்செய்து சிறைசென்ற 84ம்நெ தொண்டன் வி. ஆசிர்வாதம் C/o எ. பழனியப்ப பிள்ளை, வெற்றிலைபாக்குக் கடை, 7வது வார்டு, மதுரை.